# ஜப்பானின் ஹிரோஷிமா நகரில் நாளை கூடுகிறது ஜி-7 மாநாடு: பிரதமர் மோடி பங்கேற்பு



**புதுடெல்லி:** ஜப்பானின் ஹிரோஷிமா நகரில் நாளை கூடவுள்ள ஜி-7 மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி கலந்து கொள்ள உள்ளார்.

பொருளாதார ரீதியாகவும், தொழில்நுட்ப ரீதியாகவும் வளர்ந்த 7 நாடுகளைக் கொண்ட ஜி-7 கூட்டமைப்பின் மாநாட்டை இந்த வருடம் ஜப்பான் நடத்துகிறது. உலகில் முதல் முறையாக அணுகுண்டு தாக்குதலுக்கு உள்ளான ஹிரோஷிமா நகரில் இந்த மாநாடு நடைபெற உள்ளது. ஜப்பான் பிரதமர் கிஷிடோவின் சொந்த ஊர் என்பதாலும், அணுஆயுத தாக்குதலுக்கு எதிரான உறுதிப்பாட்டை வலியுறுத்துவதற்கான சிறந்த இடம் என்பதாலும் இந்த இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய ஜி7 கூட்டமைப்பில் உள்ள 7 நாடுகளின் தலைவர்கள் இந்த மாநாட்டில் பங்கேற்க ஷிரோஷிமாவுக்கு வருகை தர உள்ளனர். இந்த 7 நாடுகள் இல்லாது, இந்தியா, ஆஸ்திரேலியா, பிரேசில், இந்தோனேஷியா, தென் கொரியா, வியட்நாம், கமரோஸ், குக் தீவுகள் ஆகிய நாடுகளுக்கும் இந்த மாநாட்டில் பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்க உள்ளதை முன்னிட்டு செய்தியாளர்களிடம் பேசிய ஜப்பானுக்கான இந்திய தூதர் சிபி ஜார்ஜ், "பிரதமர் நரேந்திர மோடியின் ஜப்பான் பயணத்தை நாங்கள் ஆவலோடு எதிர்பார்த்து

உள்ளோம். ஜி-7 மாநாட்டில் பங்கேற்பதோடு, ஜப்பான் பிரதமரோடு இருதரப்பு பேச்சுவார்த்தையிலும் பிரதமர் மோடி பங்கேற்க இருக்கிறார். அதோடு, வேறு சில தலைவர்களோடும் அவரது சந்திப்பு நிகழ இருக்கிறது.

இந்தியா - ஜப்பான் இடையே மிகச் சிறந்த நல்லுறவு உள்ளது. கடந்த 2014-ம் ஆண்டு பிரதமர் மோடி ஜப்பானுக்கு வருகை தந்தார். அப்போது ஷின்ஷோ அபே ஜப்பான் பிரதமராக இருந்தார். அப்போது, இரு நாடுகளுக்கும் இடையே சிறப்பான இருதரப்பு உறவு இருந்தது. தற்போது ஜப்பான் பிரதமராக கிஷிடோ உள்ளார். இரு நாடுகளுக்கும் இடையேயான அந்த நல்லுறவு தற்போதும் சிறப்பாக உள்ளது" எனத் தெரிவித்துள்ளார்.

## ஜல்லிக்கட்டுக்கு தடை இல்லை; தமிழ்நாடு அரசின் சிறப்புச் சட்டம் செல்லும்: உச்ச நீதிமன்றம் தீர்ப்பு



**புதுடெல்லி:** ஜல்லிக்கட்டுக்கு தடை விதிக்க முடியாது என்றும், ஜல்லிக்கட்டு தொடர்பாக தமிழக அரசு இயற்றிய சட்டம் செல்லும் என்றும் உச்ச நீதிமன்ற அரசியல் சாசன அமர்வு தீர்ப்பு வழங்கியுள்ளது.

ஜல்லிக்கட்டுப் போட்டிகளுக்கு தடை விதிக்கக் கோரி பீட்டா உள்ளிட்ட அமைப்புகள் தொடர்ந்த வழக்கில் அனைத்து தரப்பு வாதங்களும் நிறைவடைந்த நிலையில், உச்ச நீதிமன்றம் இன்று (மே 18) தீர்ப்பு வழங்கியுள்ளது.

5 நீதிபதிகள் கொண்ட உச்ச நீதிமன்ற அரசியல் சாசன அமர்வு வழங்கிய ஒருமித்த தீர்ப்பில், ஜல்லிக்கட்டுக்கு தடை விதிக்க முடியாது என்றும், ஜல்லிக்கட்டு தொடர்பாக தமிழக அரசு இயற்றிய சட்டம் செல்லும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக ஜல்லிக்கட்டுக்கு தடை கோரி பீட்டா அமைப்பு மற்றும் விலங்குகள் நல ஆர்வலர்கள் தொடர்ந்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நீதிபதி கே.எம்.ஜோசப் தலைமையிலான ஐந்து நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வு விசாரித்தது,

"ஜல்லிக்கட்டு மனித உயிருக்கு ஆபத்து விளைவிக்கக் கூடியது. அதேபோல, காளைகளுக்கும் உடல்ரீதியாக கடுமையான தாக்கங்களை விளைவிக்கிறது. காளைகள் ஜல்லிக்கட்டில் ஓட விரும்புவது இல்லை, அவை கட்டாயப்படுத்தப்படுகின்றன. எனவே, இந்த விவகாரத்தில் தங்கள் தரப்பு கடந்த 5 ஆண்டுகளாக கள ஆய்வு செய்து சேகரித்து கொடுத்துள்ள தரவுகள், ஆதாரங்கள், அறிக்கைகளை நீதிமன்றம் கருத்தில் கொள்ள வேண்டும். மேலும் ஜல்லுக்கட்டு என்பது ஒரு கொடூரமான விளையாட்டு" என்று பீட்டா தனது வாதத்தை முன்வைத்தது.

ஜல்லிக்கட்டு தமிழர்களின் கலாசாரம் என்றாலும் கூட விளையாட்டின்போது நேரும் துன்புறுத்தல்களைத் தவிர்க்க உரிய வழிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று தமிழக அரசுக்கு உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

## கருப்பை அகற்றம் அதிகரிப்பு: மாநில அரசுகளிடம் தரவுகளைக் கேட்கும் மத்திய அரசு - பின்னணி என்ன?



**புதுடெல்லி:** கருப்பை அகற்றம் குறித்த தரவுகளை மாநில அரசுகள், மத்திய அரசோடு பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று மத்திய சுகாதாரத் துறை வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக மத்திய சுகாதாரத் துறை, அனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகளுக்கு எழுதியுள்ள கடிதத்தில், "ஏழைகள், குறைவான கல்வியறிவு உள்ள பெண்கள், குறிப்பாக கிராமப்புறங்களைச் சேர்ந்த பெண்கள் அவசியமின்றி கருப்பை அகற்றும் ஆபத்தில் உள்ளனர். சில மருத்துவ நிறுவனங்களால் செய்யப்படும் இத்தகைய தேவையற்ற கருப்பை நீக்க அறுவை சிகிச்சைகளை தடுக்கும் நோக்கில் மாநில அரசுகள் செயல்பட வேண்டும்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கருப்பை அகற்ற அறுவை சிகிச்சைகளை அரசு மருத்துவக் காப்பீடு திட்டத்தின் கீழ் மேற்கொள்ள முடியும் என்பதால், இத்தகைய காப்பீட்டுத் திட்ட நிதியைப் பெற சில தனியார் மருத்துவமனைகள் அவசியமின்றி பெண்களின் கருப்பை அகற்ற அறுவை சிகிச்சைகளை மேற்கொள்வதாகவும் இதை தடுக்க உத்தரவிடக் கோரியும் உச்ச நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தொடரப்பட்டது.

டாக்டர் நரேந்திர குப்தா என்பவர் கடந்த 2013ம் ஆண்டு இந்த பொதுநல மனுவை தாக்கல் செய்திருந்தார். அவர் தனது மனுவில், "நான் மேற்கொண்ட களப்பணியின் அடிப்படையில் கருப்பை அகற்றும் அறுவை சிகிச்சைக்கு

உட்படுத்தப்படக் கூடாத, மாற்று சிகிச்சை அளிக்கப்படக்கூடிய பெண்களுக்கு கருப்பை நீக்கம் செய்யப்பட்டு, அவர்களின் உடல்நலம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இந்த வகையான கருப்பை அறுவை சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட பெண்களில் பெரும்பாலானவர்கள் எஸ்சி, எஸ்டி, ஓபிசி சமூகங்களைச் சேர்ந்தவர்கள். பல்வேறு உடல்நலக் காப்பீட்டுத் திட்டங்களின் கீழ் அரசாங்கங்களிடமிருந்து அதிக காப்பீட்டுக் கட்டணங்களைப் பெறும் நோக்கோடு, பல சுகாதார நிறுவனங்கள் இத்தகைய நடைமுறையை தவறாகப் பயன்படுத்துகின்றன" என நரேந்திர குப்தா தெரிவித்திருந்தார்.

இதையடுத்து, தேவையற்ற கருப்பை நீக்கத்தை தடுப்பதற்கான வழிகாட்டுதல்களை மத்திய சுகாதார அமைச்சகம் கடந்த 2022ம் ஆண்டு வெளியிட்டது. இந்த வழிகாட்டுதல்களை மருத்துவமனைகள் கடைப்பிடிக்கின்றனவா என்பதை உறுதி செய்யுமாறு மாநில அரசுகளை மத்திய சுகாதார அமைச்சகம் வலியுறுத்தியது.

இதன் தொடர்ச்சியாக, மத்திய சுகாதாரச் செயலாளர் ராஜேஷ் பூஷண், மாநில சுகாதாரச் செயலாளர்களுக்கு எழுதிய கடிதத்தில், "கருப்பை நீக்கம் தொடர்பான விவகாரத்தை மத்திய அரசு உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறது. மத்திய அரசின் வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டதற்கு முன்பும், வெளியிட்டதற்குப் பின்பும் கருப்பை அகற்றம் குறித்த தரவுகளை மாநில அரசுகள் மத்திய அரசோடு பகிர்ந்து கொள்ள வேண்டும். அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் மேற்கொள்ளப்பட்ட அனைத்து கருப்பை அகற்றம் குறித்த தகவல்களும் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும்" என்று வலியுறுத்தி இருந்தார்.

இதனிடையே, இது குறித்த வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம், தேவையற்ற கருப்பை அகற்றம் நடந்துள்ளதா என்பது குறித்து 3 மாதங்களுக்குள் மாநில அரசுகள் அறிக்கை அளிக்க வேண்டும் என்றும், மத்திய சுகாதாரத்துறையின் வழிகாட்டு நெறிமுறைகளை அவை பின்பற்ற வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளது.

வளர்ந்த நாடுகளில் பொதுவாக 45 வயதுக்கு மேற்பட்ட மாதவிடாய் நின்ற பெண்களுக்கு கருப்பை நீக்கம் செய்யப்படுவதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. ஆனால், இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், 28 வயது முதல் 36 வயது வரை உள்ள இளம்பெண்களிடையே கருப்பை அகற்றம் விகிதம் தொடர்ந்து அதிகரித்து வருவதாக தெரியவந்துள்ளது.

## இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி பிரகாசமாக உள்ளது: ஐ.நா. அறிக்கையில் தகவல்



**வாஷிங்டன்:** ஐ.நா. வெளியிட்டுள்ள உலகப் பொருளாதார நிலை மற்றும் வாய்ப்புகள் குறித்த அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தெற்காசியப் பிராந்தியத்தில் இந்தியாவின் வளர்ச்சி மிகவும் பிரகாசமாக இருக்கும். இந்தியப் பொருளாதாரத்தின் வளர்ச்சி 2023-ல் 5.8 சதவீதமாகவும், 2024-ம் ஆண்டில் 6.7 சதவீதமாகவும் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உள்நாட்டு தேவை மீட்சியடைந்து வருவது பொருளாதார வளர்ச்சிக்கு சாதகமான அம்சமாக பார்க்கப்படுகிறது. இருப்பினும், அதிக வட்டி விகிதம், வெளிப்புறத் தேவையில் காணப்படும் தொய்வு நிலை ஆகியவை தொடர்ந்து நடப்பாண்டுக்கான இந்தியாவின் ஏற்றுமதி மற்றும் முதலீட்டில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

அதேசமயம், பணவீக்கம் 2023-ல் 5.5 சதவீதமாகக் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு, உலகளவில் பொருட்களின் விலை மிதமான

அளவில் காணப்படுவது முக்கிய காரணமாக இருக்கும். உலகப் பொருளாதாரம் 2023-ல் 2.3 சதவீதம், 2024-ல் 2.5 சதவீத வளர்ச்சியை பதிவு செய்யும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## தொலைத்தொடர்பு பயனாளிகளின் பாதுகாப்புக்காக சஞ்சார் சாத்தி இணையதளம் அறிமுகம்



**சென்னை**: தொலைத்தொடர்பு பயனாளிகளின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதத்தை உறுதி செய்யும் நோக்கில், மத்திய தொலைத் தொடர்புத்துறை சார்பில், ‘சஞ்சார் சாத்தி’ என்ற புதிய இணையதளம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த இணையதளத்தை மத்திய தொலைத் தொடர்பு துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் டெல்லியில் இருந்து காணொலி வாயிலாக தொடங்கி வைத்தார்.

சென்னை எத்திராஜ் சாலையில் உள்ள, தமிழகம் மற்றும் புதுச்சேரி தொலைத்தொடர்புத் துறை ஆலோசனை அலுவலகத்தில், ஆலோசகர் ஆனந்த் குமார் காணொலி காட்சியில் பங்கேற்றார்.

செல்போன் போன் வாடிக்கையாளர்களின் பாதுகாப்பை பலப்படுத்தவும், அதற்காக மத்திய அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகள் குறித்தும், மக்கள் தெரிந்து கொள்வதற்காக இந்த இணையதளம் தொடங்கப்பட்டுள்ளது. இந்த

இணையதளம் தொலைந்து போன செல்போன்களைக் கண்டறியவும், போலி செல்போன்களை அடையாளம் காணவும் உதவும்.

விழாவில் அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் பேசியதாவது: சில மாநிலங்களில், சோதனை முயற்சியாக சஞ்சார் சாத்திஇணையதளத்தை பயன்படுத்தியதன் மூலம் 40.87 லட்சம் போலி இணைப்புகள் கண்டறியப்பட்டு, அதிலிருந்து 36.61 லட்சம் இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன. மக்களை மையப்படுத்தி உருவாக்கப்பட்டுள்ள இந்த இணையதள சேவையை பயனாளிகள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

மத்திய அரசின் தொலைத்தொடர்பு வரைவு மசோதாவில் பயனாளிகளின் பாதுகாப்புக்கே முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. இந்த இணையதள சேவை, செல்போன் சார்ந்த மோசடிகளைத் தடுக்கவும், செல்போன்களைத் தவறாகப் பயன்படுத்துவதைக் கண்டறியவும் உதவும்.

சிஇஐஆர் என்ற தொழில்நுட்பத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ள இந்த சேவை மூலம், தொலைந்து போன அல்லது திருடப்பட்ட செல்போன்களை கண்டுபிடிப்பதற்கான முயற்சியை மேற்கொள்ள முடியும்.இந்த இணையதளத்தில் அளிக்கும் தகவல்கள் சரியாக இருந்தால், அடுத்த 24 மணி நேரத்தில் அவற்றை கண்காணித்து மீட்கும் பணியை மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் பேசினார்.